ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது, சட்டமுன்வடிவு ஏற்கப்பட்டது,

பிற்பகல் 1-35

(ஐ) வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு, 1993,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்டமுன் வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 15/1993), மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்டமுன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்டமுன்வடிவு எண் 15/1993) ஆய்வுக்கு@ எடுத்துக் கொள்ளப் பெற வேண்டும்'', எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. நா. சா. பழனிசாமி.

திரு. நா. சா. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, வேளாண் வருமானத்திலே ஆண்டு வருமானம் 22,000-க்கு மேல் ரூ. 30,000 வரை உள்ள வருமானத்திற்கு 20 விழுக்காடு வருமான வரி என்று இருந்ததை இப்போது 28,000-க்கு மேல் 30,000 வரை இருக்கின்ற தொகைக்கு 20 விழுக்காடு வருமான வரி என்று திருத்தம் கொண்டு வரப்பட்டிருக்கிறது. இன்றைக்கு இந்தத் திருத்தம் கொண்டு வந்திருப்பதை 22,000 என்றிருப்பதை 28,000 வரை என்று உயர்த்தியிருப்பதை வரவேற்கிறேன். இருந்தாலும் கூட இன்றைக்கு விவசாயத்திலே வருமான வரி கட்டுகின்ற அளவுக்கு வேளாண்மைத் தொழில் இல்லை என்ற உண்மையையும் நான் சொல்ல விரும்புகிறேன். இன்றைக்கு வேளாண்மைத் தொழில் அதனுடைய உற்பத்திப் பொருள்கள் அத்துணையுமே 20 ஆண்டுக் காலத்திலே ஏற்படாத ஒரு சரிவை அடைந்திருக்கின்ற நேரத்தில் இன்றைக்கு விவசாயத்திற்கு முத லீடாகப் போடுகின்ற முட்டுவழிச் செலவுகள் அனைத்தையுமே 3, 4 மடங்கு உயர்த்தியிருக்கின்ற இந்த நேரத்திலே இந்த விவசாய வருமான வரி என்ற ஒன்றை வைத்துக்கொண்டிருப்பதே சரி

@27—4—1993 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப்பெற்றுள்ளது.

1993 ஏப்ரல் 29] [திரு. நா. சா. பழனிசாமி]

தானா என்று பார்க்கக் கேட்டுக்கொள்கிறேன். விவசாயமே, இன்றைக்கு மானியத்திலே நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற ஒரு தொழிலாக, வாங்கிய கடனைக் கட்ட முடியாத ஒரு தொழிலாக இன்றைக்கு இருந்துகொண்டிருக்கின்ற நேரத்திலே, இந்த விவசாய வருமான வரி என்பது அதுவும் இன்றைக்கு 15 ஸ்டேண்டர்டு ஏக்கருக்கு மேல் நிலம் வைத்துக் கொள்ளக் கூடாது என்ற விவசாயினுடைய அஸெட், அவனுடைய சொத்துக்கே ஒரு வரம்பை வைத்துவிட்டிருக்கின்ற நிலையில், அந்த வரம்புக்குள்ள நிலத்திலேயிருந்து அவன் இவ்வளவு வருமானம் பெறுகின்ற வாய்ப்பு இல்லை. இதன் மூலமாக வருவாய்த் துறை அதிகாரிகள் வேண்டுமென்றே விவசாயிகளுக்குத் தொல்லை கொடுக்கின்ற நிலைக்குத்தான் இந்தச் சட்டம் உதவிகரமாக இருக்குமே அல்லாமல், அதனால் பெரிய வருமானம் ஒன்றும் அரசுக்கு வருவதாகத் தெரியவில்லை. எனவே, இந்த விவசாய வருமான வரியைக் கைவிட்டால் நல்லது என்ற ஒரு அபிப்பிராயத்தைத் தெரிவித்து இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன். நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: திரு. வே. தம்புசாமி.

திரு. வே. தம்புசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த வேளாண்மை வரி குறித்து ஒரு சில கருத்துக்களைக் கூற அனுமதித்த தங்களுக்கு நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். பொதுவாக இன்றைய தினம் இந்த வேளாண்மை வருமானத்திற்கு வரி விதிப்பதைக் கைவிட வேண்டுமென்று நான் கேட்டுக்கொள்கிறேன். காரணம் இன்றையதினம் வேளாண்மை தொழில் என்பது நாட்டில் ஒரு ஜீவாதாரமான தொழிலாக அமைந்திருக்கிறது. அப்படிப்பட்ட தொழில் கடுமையாக பல்வேறு நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்பட்டிருக்கிறது. மத்தியிலே ஆட்சி நடத்தக்கூடிய காங்கிரஸ்—மத்திய அரசு நாடு முழுமையும் இருக்கக்கூடிய இந்த முக்கியமான ஜீவாதாரமான விவசாயத் தொழிலிலே கடுமையான நெருக்கடியை ஏற்படுத்தியிருக்கிறது. ஒரு புறத்திலே விவசாயத்திற்குப் பயன்படுத்தக்கூடிய இடுபொருள்களுடைய விலைகள் நாளுக்கு நாள் அதிகரிப்பதோடு, இந்த ஆண்டு மேலும், கடுமையாக அதிகரித்திருக்கிறது. விவசாயத்திற்குப் பயன்படுத்தக்கூடிய உரத்தினுடைய விலையை மத்திய அரசு உயர்த்தி இருக்கிறது. டீசல், பெட்ரோல் போன்ற விலைகளை உயர்த்தியிருக்கிறது. பூச்சி மருந்து போன்ற விலைகளை உயர்த்தியிருக்கிறது.

பிற்பகல் 1-40

இப்படி உயர்த்தியது மட்டுமல்ல, அந்த விவசாயிக்கு வழங்கக்கூடிய மானியங்கள் எல்லாம் ரத்து செய்யப்பட்டிருக்கின்றன. இப்படி ரத்து செய்வதற்கு அடிப்படைக் காரணமே மத்தியில் இருக்கின்ற காங்கிரஸ் கட்சி உலக வங்கியினுடைய பொருளாதாரக் கொள்கைக்கு அடி பணிந்து இந்திய நாட்டில்

[திரு. வே. தம்புசாமி] [1993 ஏப்ரல் 29

இருக்கிற விவசாயிகளுக்கு, தமிழகத்தில் இருக்கிற விவசாயிகளுக்கு ஒரு கடுமையான பொருளாதார நெருக்கடியைத் தந்து இருப்பதன் விளைவாக இன்றையதினம் உற்பத்தி பாதிக்கப்பட்டு இருக்கிறது. இந்த ஆண்டு உற்பத்தி அதிகரித்திருக்கிறது என்று நாம் சொன்னாலும் உண்மையிலே உரத்தைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலைமை, பூச்சி மருந்தைப் பயன்படுத்த முடியாத சூழ்நிலைமை இருக்கிறது. அதற்கான மானியம் கிடைக்காத சூழ்நிலைமை இருக்கிறது. உரம், பெட்ரோல் போன்ற இடுபொருட்களின் விலைகள் உயர்ந்து இருப்பதால் அதை முழுமையும் பயன்படுத்தாத நிலைமையில் நாட்டில் உணவு உற்பத்தி குறைந்திருக்கிறது என்பதை நாம் அனைவரும் அறிவோம். அப்படிப்பட்ட நிலைமையிலே இந்தத் தொழில் கடுமையான பாதிப்புக்கு உள்ளாகியிருக்கிறது.

அதுமட்டுமல்ல, விவசாயத்தைப் பின்னுக்குத் தள்ளக்கூடிய விதத்தில் விவசாயக் கொள்கையை மத்தியில் உள்ள காங்கிரஸ் கட்சி தொடர்ந்து உருவாக்கி வருகிறது. சாதாரணமாக விவசாயிகள் விதையைக் கூட உற்பத்தி செய்ய முடியாத நிலையில் விதையையே வாங்கவேண்டுமென்று சொன்னால், இன்றையதினம் அவர்களிடத்தில் வாங்க வேண்டிய நிலைமை இருக்கிறது. இப்படிப்பட்ட சூழ்நிலையில் மறுபுறத்தில் கடன் தள்ளுபடி கிடையாது. இப்படி கடன் வாங்கிய விவசாயிகள் தொடர்ந்து பல்வேறு நெருக்கடிக்கு ஆளாக்கப்பட்டிருக்கிறார்கள். விவசாயத் தொழில் ஒரு பாதுகாப்பற்றத் தொழிலாக எந்தவிதமான பாதுகாப்பும் அதற்கு இல்லை. ஒருபுறத்தில், புயல் தாக்குகிறது; வெள்ளம் தாக்குகிறது; கடுமையான பூச்சி தாக்குகிறது, இப்போதே நம்முடைய தமிழகத்தில் கடுமையான வறட்சி நிலவுகிறது. இன்றையதினம் எல்லா மாவட்டங்களிலும் வறட்சி கடுமையாக நிலவுகிறது. அப்படிப்பட்ட இயற்கை பாதிப்புக்கள் தொடர்ந்து விவசாயிகளைப் பாதித்துக்கொண்டிருக்கிறது. அவர்கள் வாழ வேண்டும் என்பதற்காக எப்படியோ எதையாவது விவசாயத்தைச் செய்து உற்பத்தி செய்யவேண்டுமென்ற நிலைமைக்கு அவர்கள் தள்ளப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு கடுமையாக இருக்கிற இந்த நெருக்கடி மட்டுமல்ல, இன்றையதினம் பயன்படுத்துகின்ற உரத்தில் கூட கலப்படம் இருக்கிறது. கலப்படத்தைக் கண்டுபிடிப்பதற்கான நடவடிக்கையை அரசு எடுத்தாலும் கூட, ஒரு சில நடவடிக்கைகள் எடுத்து இருந்தாலும் கூட தொடர்ந்து உரத்தில் கலப்படம் செய்யக்கூடிய சூழ்நிலைமை இருக்கிறது. உரத் தொழிற்சாலைகள் தனியார் கையில் இருப்பதன் மூலம் தனியார் அதை விற்பதன் மூலம் எப்படியும், எதை வேண்டுமானாலும் கலந்து விவசாயிகள் தலையில் கட்டிவிடலாம் என்ற நிலையில் இன்றையதினம் இருக்கிறார்கள். இப்படி பல்வேறு நெருக்கடிக்கு ஆளாகியிருக்கிற விவசாயிகள் இந்த வரியைக் கட்ட முடியாத நிலை மட்டுமல்ல, வாங்கிய கடனைக் கூட கட்ட முடியாத நிலையில் இருக்கிறார்கள். அப்படி அந்த நில அடமான

1993 ஏப்ரல் 29] [திரு. வே. தம்புசாமி]

வங்கியிலே வாங்கிய கடனை மீண்டும் பரிசீலிக்க வேண்டும். அதேபோல் ஆயில் இன்ஜின் பெற்றவர்கள், சிறு விவசாயிகள், குறு விவசாயிகள், அவர்களுக்கு இருக்கிற கடனைக்கூட இன்றையதினம் தமிழக அரசு தள்ளுபடி செய்யவில்லை, அவைகளை எல்லாம் மீண்டும் பரிசீலித்து அந்தக் கடனைத் தள்ளுபடி செய்ய வேண்டும். இப்படிப்பட்ட ஒரு பொருளாதார நெருக்கடியில் சிக்கியிருக்கிற அந்த விவசாயத் தொழில் நாளுக்கு நாள் சீரழிந்து கொண்டிருக்கிற இந்த நிலையில் மேலும் வருமான வரி விதிப்பது என்பது எந்த விதத்திலும் நியாயம் இல்லை. எனவே, இந்தத் தொழிலுக்கு முன்னுரிமை கொடுத்து அதற்கு மேலும், பல்வேறு வசதிகளைச் செய்து கொடுத்து அவர்களுக்குத் தேவையான கடனைக் கொடுத்து, அவர்களுக்குத் தேவையான நீர்ப்பாசன திட்டங்களுக்கு உறுதி கொடுத்து இன்றைக்கு நாட்டினுடைய ஜீவாதார தொழிலாக இருக்கக்கூடிய விவசாயத்தை முன்னுக்குக் கொண்டு வந்து நாட்டில் பசி பட்டினி அற்ற ஒரு சூழ்நிலையை உருவாக்க முன்னுரிமை வழங்க வேண்டுமென்று இந்த நேரத்தில் கேட்டு வரி விதிப்பதை கைவிடவேண்டுமென்று மாண்புமிகு அமைச்சர் அவர்களையும் தமிழக அரசையும் கேட்டு வாய்ப்புக்கு நன்றி கூறி அமைகிறேன். நன்றி வணக்கம்.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர் :</u> மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்கள் தெரிவிப்பதில் பொருள் உண்டு. பிரச்சினைகளை நீங்கள் பேசி விடுகிறீர்கள். பேசியதற்குப் பிறகு அமைச்சர் பதில் சொல்லுகிறபோது உங்களுடைய இருக்கையில் இருந்தால்தான் திரும்ப நீங்கள் ஏதாவது விளக்கம் கேட்பதற்குக் கூட வாய்ப்பு இருக்கும். இன்னொரு இருக்கைக்குப் போய்விட்டால் நீங்கள் விளக்கம் கேட்கும் வாய்ப்பை இழந்து விடுகிறீர்கள்.

<u>மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் :</u> மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அவர்கள் மீது ஒன்றும் குற்றம் இல்லை (சிரிப்பு) நான் இதற்கு முன்னர் கொண்டுவந்த சட்ட முன்வடிவிலும் சரி, இந்த சட்ட முன்வடிவிலும் சரி வரியே போடவில்லை. வரியைத் தள்ளுபடி செய்து கொடுத்திருப்பதற்கு கூட நீங்கள் எங்களைப் பார்த்து வரி போடுகிறோம், வரி போடுகிறோம் என்று சொல்கிறீர்கள். இன்றைக்கு நான் கொண்டு வந்திருக்கிற எல்லா சட்ட முன்வடிவிலும் வரியைத் தள்ளுபடி செய்து தான் கொடுத்திருக்கிறேன். எல்லாம் தள்ளுபடி செய்து கொடுத்திருக்கிறேன். அதுமட்டுமல்ல, நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சொன்னார்கள். இப்போது எல்லாம் உச்ச வரம்பு வந்துவிட்டது. உச்ச வரம்பு வந்த பிறகு குறிப்பிட்ட நிலம் தானே இருக்கிறது, எப்படி வரி போடுகிறீர்கள் என்று கேட்டார்கள்.

[திரு. எஸ். டி. சோமசுந்தரம்] [1993 ஏப்ரல் 29

பிற்பகல் 1–45

முதலில் மாண்புமிகு புரட்சித் தலைவர் காலத்திலேயே பல ஆண்டுகளுக்கு முன்னாலே நெல், சோளம், கரும்பு ஆகிய எல்லா உணவுப்பொருட்களுக்கும் 15 ஆண்டுகளுக்கு முன்பாகவே வரியைத் தள்ளுபடி செய்து 60 ஆயிரம் விவசாயிகள் நன்மை அடைந் தார்கள். மாண்புமிகு புரட்சித் தலைவி அவர்கள் ஆட்சி காலத் தில் இவர் வந்த பிறகு என்ன செய்தார் என்று கேட்டால் தமிழ கத்தில் விளைகின்ற எல்லாவற்றிற்கும் வெற்றிலை, வாழை, தென்னை, பருத்தி, எள் போன்ற எல்லாவற்றிற்கும் வரி தள்ளுபடி செய்து ஆகிவிட்டது. வரி எதற்கும் இல்லை. ஆனால் வரி எதற்குப் போடுகிறோம் என்று சொன்னால் மலைப் பகுதி களிலே என்ன போடுகிறார்கள் தேயிலை போடுகிறார்கள்; காப்பி போடுகிறார்கள்; ஏலக்காய் போடுகிறார்கள் என்றால் அவர்களெல்லாம் ஏழை விவசாயிகள் அல்ல. அவர்கள் எல் லோரும் வசதி படைத்தவர்கள்தான். ஆனால் அப்படியிருந்தா லும்கூட, அவர்களுக்கும் இதிலே சலுகை கொடுத்திருக்கிறோம். இங்கேயுள்ளவர்கள் யாருக்கும் வரி இல்லை என்பதையும் தெரி வித்துக்கொள்கிறேன். தென்னை மரத்திற்கெல்லாம் போடலாம் என்றுதான் நான் நினைக்கிறேன். திராட்சைக்கெல்லாம் போடலாம் என்றுதான் நான் நினைக்கிறேன். வெற்றிலைக்குப் போடலாம் என்று கூட நான் நினைக்கிறேன். ஆனாலும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வேண்டாம் என்று சொல்லிவிட்டார்கள். ஆகையினாலே, போடவில்லை. இதைக் கொண்டு வருவதை, ஓன்லி தேயிலை, காப்பி, ஏலக்காய் போன்றவைகளுக்குத்தான், அதிலும் மலைப் பகுதிகளிலே மட்டும். சமநிலைக்குப் போட வேயில்லை என்பதைத் தெரிவித்து இதை நிறைவேற்றித்தர வேண்டுமாய் கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் உங்கள் மனதிலே உள்ளதைச் சொல்லி விட்டீர்கள். சட்டத்திலே அதெல்லாம் கிடையாது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம்,

தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு பிரிவுவாரியாக ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெறுகிறது.

மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்கள் தன் திருத்தத்தை முன்மொழியலாம்.

பிரிவு-2.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட திருத்தத்தை மொழிகிறேன்:

"In clause 2, for 28,000 substitute Rs. 28,000"

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சர் அவர்களின் திருத்தம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். திருத்தம் ஏற்கப்படுகிறது.

பிரிவு 2, திருத்தப்பெற்றபடி, சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

பிரிவு 1. முகப்புரை, நெடுந்தலைப்பு ஆகியவை சட்ட முன்வடிவின் பகுதியாக இருக்கவேண்டும் என்னும் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க. (ஆம்)
மறுப்போர் 'இல்லை' என்க. (இல்லை)
ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.
ஏற்போரே அதிகம். தீர்மானம் நிறைவேறியது.
மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. எஸ். டி. சோமசுந்தரம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு தமிழ்நாடு வேளாண் வருமான வரி (திருத்தச்) சட்ட முன்வடிவு திருத்தப்பெற்றபடி நிறைவேற்றப் பெறவேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : மாண்புமிகு வருவாய்த் துறை அமைச்சர் அவர்களின் தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்படுகிறது.

ஏற்போர் 'ஆம்' என்க.

(ஆம்)

மறுப்போர் 'இல்லை' என்க.

(இல்லை)

ஏற்போரே அதிகம் என்று கருதுகிறேன்.

ஏற்போரே அதிகம், தீர்மானம் நிறைவேறியது.

சட்ட முன்வடிவு, திருத்தப்பெற்றபடி, ஏற்கப்பட்டது.

(ஓ) குற்றவியல் சட்டங்கள் சார்ந்த (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு, 1993.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 1993 ஆம் ஆண்டு குற்றவியல் சட்டங்கள் சார்ந்த (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1993), மாண்புமிகு சட்டத்துறை அமைச்சர்.

மாண்புமிகு திரு. கே. ஏ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவை தலைவர் அவர்களே,

''1993 ஆம் ஆண்டு குற்றவியல் சட்டங்கள் சார்ந்த (தமிழ்நாடு திருத்தச்) சட்ட முன்வடிவு (சட்டமன்றப் பேரவை சட்ட முன்வடிவு எண் 16/1993) *ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பெற வேண்டும்''
எனக் கோருகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திரு. டி. எம். ரங்கராஜன்.

திரு. டி. எம். ரங்கராஜன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1993 ஆம் ஆண்டு குற்றவியல் சார்ந்த தமிழ்நாடு திருத்தச் சட்டமுன்வடிவினை ஆதரித்துப் பேச வாய்ப்பளித்த தங்களுக்கு என்னுடைய மனமார்ந்த நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

---

*27—4—1993 ஆம் தேதியிட்ட தமிழ்நாடு சிறப்பு அரசிதழில் வெளியிடப் பெற்றுள்ளது.